**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 17.10.2024 |
| Case No. | : **O.S. 399/2019** | Nationality | : Indian |
| Name | : ஆரிட்மேரி | Religion | : |
| Father's/Husband's Name | : ஆரோக்கியசாமி | Age | : 38 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. எனது கணவர் பெயர் ஷான்ரோபர்ட் ஆகும். வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது மாமா ஆவார். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 127/11, 127/11 ஏ, 127/13, 127/13 ஏ, 127/16, 127/16 ஏ, 127/19, 127/19 ஏ ஆகும். தேவசகாய பிள்ளையின் வாரிசு சான்றிதழை நான் பார்க்கவில்லை என்றால் இல்லை. வாரிசு சான்றிதழ் கோரி வாதி வழக்கிற்கு முன்பாக விண்ணப்பித்துள்ளார். தாவா சொத்து தேவசகாய பிள்ளைக்கு எவ்வாறு கிடைத்தது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நான் பார்த்துள்ளேனா என்றால் மூலம் பத்திரம் பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தின் தேதி மாதம் வருடம் தெரியுமா என்றால் தெரியவில்லை. அந்த ஆவணத்தை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆவணம் கோரி விண்ணப்பித்துள்ளதாக சொன்னார். எங்கு விண்ணப்பித்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தில் வாதிக்கு எந்த உரிமை மூலம் இல்லை என்றாலும், அதனால்தான் அவர் பதிவு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவர் தேவசகாயம் என்பவரின் வாரிசு இல்லை என்றாலும் வாதி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றாலும் சரியல்ல.

**5 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால் அரியலூர் மாவட்டம் மேலகுடிக்காடு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அதற்கு முன்பாக நான் செவிலியராக கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் பணிபுரிந்து வந்தேன். வாதிகள் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வாதியின் பூர்வீக சொத்தில் ஜோஸ்பின் வகைறாவினர் இடையூறு செய்ததால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி என்ன வேலை செய்து வருகிறார் என்றால் மலேசியாவில் சொந்தமாக தொழில் செய்து வருகிறார். வாதி தாவா சொத்துக்கள் உள்ள கிராமத்தில் குடியிருந்து வரவில்லை என்றால் சரிதான். தேவசகாயம் பிள்ளைக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் செல்வநாயகம், சாமிதுரை மற்றும் வெள்ளையன்(எ) சவரிமுத்து ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். செல்வநாயகம் இறந்துவிட்டார். செல்வநாயகத்திற்கு ஒரு மகன் மற்றும் 2 மகள்கள் உள்ளார்கள். மகன் பெயர் தேவராஜ், மகள்கள் பெயர் அன்னம்மாள் மற்றும் சந்தனமேரி ஆகும். மேற்படி மூவரும் இறந்துவிட்டார்கள். தேவராஜ் என்பவருக்கு குழந்தைகள் உள்ளார்கள் என்றால் அவருக்கு 2 மகன்கள் மற்றும் 4 மகள்கள் உள்ளார்கள். மகன்கள் பெயர் செல்வராஜ், ஜீவரத்தினம் ஆகும். மகள்கள் பெயர் செல்வி, சுசி, பாத்திமாசிஸ்லி, அந்தோணியம்மாள் ஆகும். மேற்படி செல்வராஜ் மற்றும் ஜீவரத்தினம் இறந்துவிட்டார்கள். மகள்களில் பாத்திமாசிஸ்லி இறந்துவிட்டார். மற்ற மகள்கள் உள்ளார்கள். இறந்துபோன செல்வராஜ் மற்றும் ஜீவரத்தினம் ஆகியோருக்கு வாரிசுகள் உள்ளார்கள் என்றால் உள்ளார்கள். செல்வராஜ் என்பவருக்கு 1 மகன் மற்றும் 2 மகள்கள் உள்ளார்கள். அவர்கள் பெயர் தெரியாது. ஜீவரத்தினம் என்பவருக்கு 2 மகன் மற்றும் 1 மகள் உள்ளார்கள். அவர்கள் பெயர் தெரியாது.

மேற்படி நபர்கள் எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் செல்வி, சுசி மலேசியாவில் உள்ளார்கள். அந்தோணியம்மாள் நெய்வேலியில் வசித்து வருகிறார். மேற்படி நபர்கள் யாரும் தாவா சொத்து உள்ள கிராமத்தில் வசித்து வரவில்லை என்றால் சரிதான்.

2. செல்வநாயகம் எந்த தேதியில் எங்கு இறந்தார் என்றால் மானம்பாடி கிராமத்தில் இறந்தார். தேதி தெரியவில்லை. செல்வநாயகத்தின் வாரிசுகள் செல்வராஜ் மற்றும் ஜீவரத்தினம் எங்கு இறந்தார்கள் என்றால் மலேசியாவில் இறந்துவிட்டார்கள். அவர்கள் எந்த வருடம் இறந்தார்கள் என்றால் செல்வராஜ் 2011 ம் வருடம் இறந்தார். ஜீவரத்தினம் எந்த வருடம் இறந்தார் என்று ஞாபகமில்லை. செல்வநாயகம் இறந்து எத்தனை வருடம் இருக்கும் என்றால் சுமார் 50 வருடத்திற்குள் இருக்கும். செல்வநாயகம் இறந்து 50 வருடத்திற்கு மேல் ஆகிவிட்டதால் மேற்படி விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும்.,

3. சாமிதுரை எங்குள்ளார் என்றால் சாமிதுரை இறந்துவிட்டார். சாமிதுரை எப்போது இறந்தார் என்றால் இறந்த வருடம் எனக்கு தெரியவில்லை. அவர் கும்பகோணத்தில் இறந்துவிட்டார். சாமிதுரைக்கு 2 மகள்கள் உள்ளார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியவில்லை. அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள். அவர்களது வாரிசுகள் கும்பகோணத்தில் வசித்து வருகிறார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியவில்லை. சவுரிமுத்து எங்குள்ளார் என்றால். அவரும் மலேசியாவில் இறந்துவிட்டார். அவர் எப்போது இறந்தார் என்றால் 1972 ம் வருடம் என்று நினைக்கிறேன். சரியாக ஞாபகமில்லை. நான் அவரது இறப்பு நிகழ்சியில் கலந்துகொள்ளவில்லை என்றாலும் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவருக்கு சந்தானம் மற்றும் அந்தோணிசாமி என்ற 2 மகன்கள் உள்ளார்கள். சந்தானம் மலேசியாவில் இறந்துவிட்டார். அந்தோணிசாமி மலேசியாவில் வசித்து வருகிறார். சந்தானம் என்பவருக்கும் 5 மகன்கள் மற்றும் 3 மகள்கள்

வாரிசுகள் ஆவார்கள். மகன்கள் பெயர் செல்வின்ரிச்சர்ட், ஸ்டான்லிஜெயின், ஷான்ரோபர்ட், சைமன்ஜேம்ஸ், லியானார்டு தேவசகாயம் ஆகும். மகள்கள் பெயர் ரோஸ்லின்ஜீனா, பெனிதாகிரேஸ், எலிசபெத் ஆகும்.

4. மேற்படி சந்தானத்தின் வாரிசுகள் எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் மலேசியாவில் வசித்து வருகிறார்கள். அவர்கள் அனைவரும் மலேசியாவில் குடியுரிமை பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் அனைவரும் பிறந்தது மலேசியாவில் என்றால் சரிதான். அவர்களுக்கு மலேசியன் பாஸ்போர்ட் உள்ளது என்றாலும் இந்தியன் பாஸ்போர்ட் கிடையாது என்றாலும் சரிதான். வாதியை தவிர மற்ற வாரிசுகள் யாரும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்களா என்ற விவரம் தெரியுமா என்றால் அவர்கள் அனைவரும் வரமுடியாது என்பதால் அவர்கள் சார்பாக வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு பற்றிய முழு விவரமும் தெரியாமல் வாதி கேட்டுகொண்டதற்கிணங்க வாதியின் உறவினர் என்பதால் நான் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.10.18 18:43:37 +0000

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.